**<u>ஹஹபுத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின்கீழ் உள்ள தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் சேவை தொகுதியில் (MN-03-2016) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2024/2025</u>**

தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் (MN-03-2016) சேவை தொகுதிக்கு ஏற்புடையதாக பின்வரும் பதவிகளுக்கு தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பத்தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன. ஏற்புடைய பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் பின்வருமாறு ஆவதுடன், விண்ணப்பதாரிகள் கீழ்வரும் படிவம்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2025.07.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்ககூடியவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

i. தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்) (Technical Officer (Conservation Assistant)) - 07
ii. தொல்பொருளியல் ஒளிப்பட படியெடுப்புக்கலைஞர் (Archaeological Photographer) - 03

**01. பரீட்சைத் திகதி:**

இந்தப் பரீட்சை 2025 செப்டெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இந்தப் பரீட்சை ஒத்திவைப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கமைவாக தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

**02. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பத்தாரிகளிடையே எழுத்திலான பரீட்சையில் சித்தியடைந்தும், உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்கின்றதுமான விண்ணப்பத்தாரிகளினது புள்ளிகளின் திறமையின் ஒழுங்குமுறைப்படியும், விண்ணப்பித்துள்ள பதவிகளின் ஒழுங்குமுறைப்படியும் ஒவ்வொரு பதவியின் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பத்தாரிகளின் எண்ணிக்கையினரை பொதுவாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, கல்வித் தகைமைகள் மற்றும் உடற்றகைமைகள் என்பன உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**2.1 எழுத்திலான பரீட்சை:-**

இப் பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்துள்ளன.

| தொ. இல | வினாப்பத்திரத்தின் பெயர் | காலம் | பாடவிதானம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | நுண்ணறிவு | 01மணித்தியாலம் | விண்ணப்பத்தாரியின் தர்கரீதியான திறமை, அவரது சிந்தனை பகுப்பாய்வு திறன் மற்றும் தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பன தீர்மானிக்கும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். | 100 | 40 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | விடயத்துடனான தொழில்நுட்பவியல் பரீட்சை | 01 1/2 மணித்தியாலங்கள் | (அ) தொழில்நுட்ப அலுவலர் (பாதகாப்பு உதவியாளர்) பதவிக்காக,<br>- கட்டிடக்கலை பாதுகாப்பு கோட்பாடுகள் பற்றிய பொதுவான புரிதல்<br>- வரலாற்று நினைவுச் சின்னங்கள் தொடர்பான அடிப்படை அறிவு<br>- மதிப்பீடுகளை திட்டமிடல் / மதிப்பீடுகளை தயாரித்தல் தொடர்பான அறிவு<br>- வரைவுகளை வரைதல் மற்றும் உபகரணங்கள் தொடர்பான அறிவு/கட்டுமான தொழில்நுட்பம் தொடர்பான அறிவு<br>(ஆ) தொல்பொருளியல் ஒளிப்படபடியெடுப்புக்கலைஞர் (Archaeological Photographer பதவிக்காக,<br>- அடிப்படை புகைப்பபட-மெடுத்தல் உபகரணங்கள் தொடர்பான அறிவு<br>- புகைப்படமெடுத்தல் தொழில்நுட்பவியல் செயற்பாடு தொடர்பான அறிவு<br>- புகைப்படமெடுத்தலுக்கு ஏற்புடையதான இரசாயன பொருட்கள் தொடர்பான அறிவு<br>- அச்சீட்டு கடுதாசி வகைகள் தொடர்பான அறிவு<br>- புகைப்படமெடுத்தல் தொடர்பான கோடுபாடுகள் | 100 | 40 |

**2.2 பரீட்சை மொழிமூலம் :**

i. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும்.

ii. பரீட்சார்த்தியொருவர் பரீட்சையில் தோற்றுகின்ற எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும்.

iii. தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படமாட்டாது.

**2.3 பொதுவான நேர்முகப் பரீட்சை:**

எழுத்திலான எல்லா வினாத்தாள்களுக்கும் விண்ணப்பத்தாரிகள் தோற்றுதல் வேண்டும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் 40% ஆன ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை சித்தியடைந்த விண்ணப்பத்தாரிகளுக்கிடையில் திறமையின் ஒழுங்கு முறைபடியும் விண்ணப்பம் செய்துள்ள பதவிகளின் ஒழுங்குமுறைப்படியும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினரை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும். இந்த நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமைகள் மற்றும் உடற்றகைமைகள் என்பன உறுதிப்படுத்தப்படும். அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**03. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

3.1 கல்வித் தகைமைகள் **-**

**தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்) தொல்பொருளியல் ஒளிப்பட படியெடுப்புக்கலைஞர் (Archaeology Reprographer) பதவிகளுக்காக**

விஞ்ஞானம்/கணிதம் அல்லது தொழில்நுட்பவியல் விடய துறைக்குரிய இணைந்த கணிதம், பௌதீகவியல், தொழில்நுட்பவியலுக்காக விஞ்ஞானம் அல்லது பொறியியல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே முறையில் சித்தியடைதல்.

மற்றும்

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் ஆறு பாடங்களில் (06) கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**3.2 தொழில்சார் தகைமைகள் -**

**3.2.1 தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்) பதவிக்காக**

(அ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தொழில்நுட்ப கல்லூரியில் தேசிய தொழில்நுட்பவியல் (சிவில்/ அளவுகள் மற்றும் அளவீடுகள்) சான்றிதழை பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் அதற்கு சமமான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) மொறட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்), தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்), கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்), இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்), இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் 1 ஆவது பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல், மேற்படி தொழில்நுட்பவியல் தகைமைகளுடன் எல்லா வகையிலும் தொடர்பு உள்ளது என்பதை இலங்கை தொழில்நுட்பவியல் சபையால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏனைய தொழில்நுட்பவியல் தகைமைகள், தொழில் துறைக்கு ஏற்புடையதான தேசிய தொழில் திறன்கள் (NVQ) 06 மட்டத்திலான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.2.2 **தொல்பொருளியல் ஒளிப்பட படியெடுப்புக்கலைஞர் (Archaeological Photographer) பதவிக்காக**

(அ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிறுவனத்தால் ஓராண்டு முழுநேரகாலம் அல்லது இரண்டு ஆண்டுகளிலான பகுதிநேர புகைப்படவியல் தொடர்பான கற்கைநெறி பூர்த்தி செய்யப்பட்டு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) புகைப்படவியல் தொடர்பான தேசிய தொழில்சார் திறன்கள் (NVQ) 06 ஆவது மட்டத்தில் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.3 **உடற் தகைமைகள் -**

பரீட்சார்த்தி நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு முடியுமான வகையில் சிறந்த உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு

மேற்படி 3.1 இல் கல்வித் தகைமைகளுடன், 3.2 இல் உரிய பதவிக்கு ஏற்புடையதாக (ஆ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பத்தாரிகள், 111 ஆம் தரத்தின் பதவிக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

மேற்படி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுடன், 3.2 இல் உரிய பதவிக்கு ஏற்புடையதாக (அ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பத்தாரிகள், ஓராண்டு (01) பயிற்சி காலத்திற்கு உட்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

மேற்படி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளை மட்டும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பத்தாரிகள், இரண்டு (02) ஆண்டுகளிலான பயிற்சி காலத்திற்கு உட்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

பயிற்சிக் காலத்தின் இறுதியில் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.

i. இரண்டு வருட பயிற்சி காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பரீட்சார்திகள், பதவிக்கான பாடவிதானம்படி பெற்றுக்கொள்கின்ற இரண்டு ஆண்டுகளிலான கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியிலுமான பயிற்சியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டு உரிய பரீட்சை சித்தியடைந்த பின்னர் 111 ஆம் வகுப்புக்கு ஏற்புடையதான சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்ப படிநிலையில் வைக்கப்படுவார்கள்.
ii. ஓராண்டு பயிற்சி காலப்பகுதிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பரீட்சார்த்திகள், பதவிக்கான பாடவிதானம் படி பெற்றுக்கொள்கின்ற ஓராண்டிலான கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியிலுமான பயிற்சியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டு உரிய பரீட்சை சித்தியடைந்த பின்னர் 111 ஆம் வகுப்புக்கு ஏற்புடையதான சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்ப படிநிலையில் வைக்கப்படுவார்கள்.
iii. மேற்படி i மற்றும் ii இன் கீழ் பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவதற்கு தவறுகினற பயிலுநர்கள் இருப்பார்களாயின், அவர்களுக்கு 06 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதி பொருட்டு தனது பயிற்சி காலத்தை நீடித்துக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதுடன், அவ்வாறு நீடிக்கப்படும் காலப் பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களினது சேவையை முடிவுறுத்தப்படும்.

111 ஆவது தரத்திற்கு ஏற்புடையதாக தகைமைகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பத்தாரிகளிடமிருந்து வெற்றிடங்களைப் பூர்த்தி செய்த பின்னர், ஒழுங்குமுறையில் 01

ஆண்டு மற்றும் 02 ஆண்டுகளிலான பயிற்சி காலப் பகுதிக்கு அமைவாக தகைமைகளை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தாரிகளிடமிருந்து வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்படும்.

3.4 **ஏனைய தகைமைகள் -**

3.4.1 இலங்கை பிரசையாதல் வேண்டும்.

3.4.2 விண்ணப்பத்தாரி நல்லொழுக்கம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

3.4.3 தொழில்சார் தகைமைகளை பூர்த்தி செய்கின்ற திகதி 2025.07.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாதல் வேண்டும்.

3.4.4 இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வதற்கு தேவையான தகைமைகள் 2025.07.07 ஆம் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.4.5 ஏதேனும் சமய குருகுலத்தில் துறவியாக உள்ள எவரேனுமொருவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்.

04. **வயதெல்லை –**

2025.07.07 ஆம் திகதியில் 18 வயதுக்கு குறையாதும் 30 வயதுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

(அதன்படி 2007.07.07 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.07.07 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதி உள்ளவர்கள் மட்டும் இதன் பொருட்டு விண்ணப்பிக்கலாம்.)

05. மாதச் சம்பள அளவுத் திட்டம்-

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையில் அட்டவணை 1 இன்படி பதவிக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் ரூபா. 31,040 – 10 x 445 – 11 x 660 -10x730-10x750-57,550/-(MN-03-2016) ஆகும்.

06. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்:**

6.1 இப் பதவி நிரந்தரமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற கொள்கையுடனான தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்படுதல் வேண்டும்.

6.2 அரசாங்க சேவையின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2020.01.28 ஆம் திகதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் சேவை தொகுதியின் (MN-03-2016) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்புடையதான எல்லா நிபந்தனைகளுக்கும், அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு மேற்கொண்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைவாக தெரிவு செய்கின்ற பரீட்சார்த்தியொருவர் தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் சேவை தொகுதியில் (MN-03-2016) 111 ஆவது தரத்தில்/ பயிற்றுவிப்பு தரத்தில் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

6.3 தம்மிடம் வழங்கப்பட்ட பதவியில் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கப்படாவிடின் மற்றும்/அல்லது நியமனம் செய்யப்பட்ட கடைமைகளில் அல்லது நியமனம் செய்யப்பட்ட பிரதேசத்தில் கடைமைகள் பொறுப்பேற்பதனை நிராகரிக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பத்தாரிகளின் நியமனங்களை இரத்துச் செய்யப்படலாம்.

6.4 வினைத்திறன்காண் தடை பரீட்சை இலங்கை தொழில்நுட்பவியல் சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைவாக இருத்தல் வேண்டும். நீங்கள் 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க

நிருவாக சுற்றறிக்கை 18/2020 இன் ஏற்பாடுகளின் படி உரிய மட்டத்திலான அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## 07. விண்ணப்பம் செய்யும் முறை :-

(7.1) விண்ணப்பபடிவங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனை 8 1/2“ x 12 “ (A 4) அளவிலான கடுதாசி தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். 1.0 தொடக்கம் 5.0 வரையிலான தலைப்புகளை விண்ணப்பப் படிவத்தில் முதலாவது பக்கத்திலும், 6.0 தொடக்கம் 8.0 வரை அதன் இரண்டாவது பக்கத்திலும், 9.00 தொடக்கம் 10.00 வரை அதன் மூன்றாவது பக்கத்திலும், அமையும் வகையில் தமது விண்ணப்பங்களை தயாரிக்கப்படுதல் வேண்டும். மேலும் அதனை தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழிமூலத்திலயே தமது கையெழுத்தில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பபடிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஒழுங்கமையாத மற்றும் முழுமைப்பெறாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படுவதால், விண்ணப்பத்தை அனுப்பி வைப்பதற்கு முன்னர் அதனை, பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டள்ள மாதிரி படிவத்திற்கு ஒழுங்கமைவானதா என்பது தொடர்பாகவும், எல்லா தகவல்களையும் உள்ளடக்கி விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

தங்களது வசதி கருதி சரியாக தயாரிக்கப்பட்ட பரீட்சை விண்ணப்பப் படிவம் தொல்பொருளியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் (www.archaeology.gov.lk) தரவிறக்கம் செய்யலாம்.

7.2 விண்ணப்ப படிவத்துடன், எந்தவொரு சான்றிதழின் பிரதிகளையும் இணைத்து அனுப்புதலாகாது

7.3 பரீட்சைக் கட்டணம்:

பரீட்சைக் கட்டணம் ரூபா 600/- ஆவதுடன் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கும் வகையில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகம் / மாவட்ட / பிரதேச செயலகத்திடம் பணம் செலுத்தப்பட்டு விண்ணப்பத்தாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை, அதன் ஒரு விளிம்பினைக்கொண்டு விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டிவிடுதல் வேண்டும். பரீட்சை கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்துவதற்கோ வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது. அதேபோன்று பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

7.4 பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பதிவு தபால்மூலம் 2025.07.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், தாபன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ.

இலக்கம் 1503, கொழும்பு, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் சேவை தொகுதியின் (MN-03-2016) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை – 2024/2025"** என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.5 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பத்தாரரின் கையொப்பம் அரசாங்க கல்லூரி ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர், ஏனைய மதம்சார் இடங்களுக்கு பொறுப்பான அல்லது மதகுருமார்களில் கவனிக்கத்தக்க அந்தஸ்தினை வகிக்கும் மதகுருமார்களால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

7.6 எல்லா வகையிலும் பூரணமற்ற விண்ணப்பங்களை இரத்துச் செய்யப்படும். தபாலில் காணமல் போகும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் அல்லது தாமதமாதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

08 வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பம் செய்திருப்பார்கள் என்ற பூர்வாங்க முடிவின்மீது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பத்தாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை அனுப்பி வைத்தவுடன் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டு பத்திரிக்கை அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள் இருப்பாராயின், அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்தின் தாபன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்கையில் விண்ணப்பத்தாரி தாம் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர், விண்ணப்பத்தாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத்தாரி கொழும்பிற்கு வெளியக பிரதேசத்தை வதிவிடமாக கொண்டிருப்பின், அந்த விபரங்களுடன், தொலைநகல்மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியினை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில், விண்ணப்பத்தாரியின் தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட வேண்டுகோள் கடிதமொன்றை, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்த பின்னர் அது தொடர்பாக உசாவுதல் மிக பனுள்ளதாகும். அவ்வாறு மேற்கொள்கையில் பரீட்சை திணைக்களத்தால் உசாவும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தாம் வசம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் தபாலில் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டை தயாராக வைத்திருத்தலும் பயனுள்ளதாகும்.

அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தனது ஒப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட மாட்டாது.

09. பரீட்சார்த்தியொருவர் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் எந்தவொரு ஆவணமாயினும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய அடையாள அட்டை.
(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடி மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருதல் வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பத்தாரிகளை பரீட்சை மண்டபத்தில் அனுமதிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சை மண்டபத்திற்கு சமூகமளித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து வெளியில் செல்கின்ற வரை, பரீட்சை மண்டப அதிகாரிகளுக்கு விண்ணப்பத்தாரியை அடையாளம் காணக் கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடி மறைக்காது இருத்தல் வேண்டும்.

10. **தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**:

பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகள் வழங்குதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுதல் வேண்டும்.

பரீட்சார்த்தியொருவருக்கு தகைமைகள் இல்லையென அறிய வருமாயின், பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் அல்லது பரீட்சை நடக்கும் காலத்தில் அல்லது பரிட்சைக்கு பின்னர் எந்தவொரு வேளையிலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். அரசாங்க சேவையில் சேர்த்துக் கொண்டதன் பின்னர், பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்துள்ள எந்தவொரு தகவலும் அது தவறானதென தெரிந்துகொண்டே அவரால் வழங்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்படுமாயின் அல்லது ஏதேனும் முக்கிய தகவலை வேண்டுமென மறைக்கப்பட்டுள்ளதென அறியவருமாயின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

11. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைவாக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும்

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியாகும் இவ்வறிவித்தலில் மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது இணக்கமின்மை காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவிப்பு பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திகதி: 2025.................

தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம்
தொல்பொருளியல் திணைக்களம்
கொழும்பு 07